(4) பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்.

MR. DEPUTY SPEAKER: We shall now take up for consideration the resolution given notice of by the hon'ble Member Thiru N. Veerasami.

I now read the resolution given notice of by Thiru N. Veerasami:—

"This House resolves that Thiru K. A. Mathiazhagan be removed from the office of Speaker of the Legislative Assembly of Tamil Nadu."

Those who are in favour of leave being granted under Rule 54 to move the resolution may rise in their places.

(More than 35 Members rose in favour of the motion).

MR. DEPUTY SPEAKER: I announce that leave is granted for the resolution, by the House. Thiru N. Veerasami may now move his resolution.

(கூச்சல், ன்குழப்பம்.)

THIRU N. VEERASAMI: I move—

"This House resolves that Thiru K. A. Mathiazhagan be removed from the office of Speaker of the Legislative Assembly of Tamil Nadu".

THIRU RAMA ARANGANNAL: Sir, I second the resolution.

(கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தீர்மானம் இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. நா. வீராசமி: இன்று இந்த மன்றத்தில் சபாநாயகர் அவர்கள் மீது கொண்டுவரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எனது கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். கடந்த மாதம் இந்த மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சபாநாயகர் அவர்கள் தன்னுடைய அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தி, அதை ஒத்தி வைத்துவிட்டார்கள். மேலும், ஆளுநர் அவர்கள் ஆணையை எதிர்த்தும் நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இதனால் இந்த மன்றத்திற்கு மாசு கற்பித்திருக்கிறார்கள். இந்த மன்றத்

திற்கு மாசு ஏற்படுத்துகிற வகையில் தன்னுடைய அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டுகளை நான் சபாநாயகர் அவர்கள்மீது சுமத்தி, அவர் உடனடியாகப் பதவியிலிருந்து விலகவேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

MR. DEPUTY SPEAKER: Now I put the motion of Thiru N. Veerasami to the vote of the House.

The motion was put by Mr. Deputy Speaker and declared carried.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

(கூச்சல், குழப்பம்)

(5) 1972-73-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாவது துணை மானியக் கோரிக்கை—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்து இரண்டாவது துணை மானிய கோரிக்கையை சபையிலே படித்துவிட்டதாக ஏற்றுக் கொண்டு, அதை நடவடிக்கை குறிப்பிலே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துணை மானியக் கோரிக்கை இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருப்பதால், நடவடிக்கைக் குறிப்பில் அது ஏறும்.

"அவைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கையொன்றும் இம்மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 4.72 கோடி ரூபாயாகும். இதில் 3.95 கோடி ரூபாய், வருவாய்க் கணக்கின் கீழ் வருவதாகும்; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சார்வதாகும். மத்திய அரசு நிதிப் பொறுப்பேற்று, நாம் நடத்தும் திட்டங் களுக்கென 2.82 கோடி ரூபாய் அளவிற்கு இம் மானியங்களில் நிதி